DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, THOOTHUKUDI.

| | | |
|---|---|---|
| Calendar<br>Miscellaneous<br>(Chapter.. | ... | DEPOSITION OF WITNESS |
| Preliminary Register | ... | Case No. S.C.No.249/2024 |
| Sessions | ... | |
| Deposition of witness for | | Prosecution - P.W.7<br>Defence<br>Court |

| | |
|---|---|
| Name | செந்தில்வேல் குமார் |
| Father's Name | த/பெ.சுப்பிரமணியன் |
| Village | திருவைகுண்டம் |
| Taluk | |
| Age | 50 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21.05.2026.

**(எதிரிகள் ஆஜர்.)**

**முதல் விசாரணை :–**

1. நான் தற்போது திருவைகுண்டம் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பாக 17.05.2024ம் தேதி தூத்துக்குடி முத்தையாபுரம் காவல் நிலையத்தில் பணியில் இருந்தபோது காலை 10.00 மணியளவில் உதவி ஆய்வாளர் முத்தமிழ் அரசன் என்பவர் எழுத்துமூலமாக கொடுத்த புகாரை பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண். 163/2024 U/s.341, 294(b), 353, 307 506(2)IPC ன் பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்தேன். புகார் மனு ஏற்கனவே அ.சா.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ 3** ஆகும். அதன் அசல் புகார் மனு மற்றும் முதல் தகவல் அறிக்கையை

நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன் இதர நகல்களை சம்பந்தபட்ட உயர்அதிகாரிகளுக்கு அனுப்பியும் விசாரணை நகலை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடத்திற்கு காலை 11.30 மணிக்கு சென்று சாட்சிகள் பால்சன்துரை மற்றும் சண்முகசாமி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்தேன். மேற்படி பார்வை மகஜர் **அசா.ஆ 4** ஆகும். மாதிரி வரைபடம் **அ.சா.ஆ 5** ஆகும். பின்னர் சாட்சிகள் முத்தமிழ் அரசன் , சந்தன குமார், பால்சன் துரை, சண்முகசாமி ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின் இந்த வழக்கின் எதிரிகளைத் தேடி அத்திமரப்பட்டி To குலையன்கரிசல் ரோட்டில் வரும்போது மதியம் 13.45 மணிக்கு இந்த வழக்கில் கண்ட எதிரிகளான ஜெயந்த்குமார் மற்றும் அபிலாஸ்வர்மா ஆகியோர்கள் அத்திமரப்பட்டி வாழைத்தோப்பில் இருந்து ரோட்டிற்கு நடந்து வந்தவர்களை போலிஸ் பார்ட்டி சகிதம் மடக்கி பிடித்து எதிரிகளை விசாரித்தபோது சாட்சிகள் பிரதீப் மற்றும் பாலசுப்பிரமணியன் ஆகியோர் முன்னிலையில் எதிரிகள் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை காவல் வாகனத்தில் இருந்த மடிக்கணினியில் பதிவு செய்தேன். பின்னர் எதிரிகள் அளித்த அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எடுத்து ஒப்படைத்த அருவாள் ஒன்று , கத்தி ஒன்று அத்தாட்சியில் கைப்பற்றினேன். அருவாளை கைப்பற்றிய அத்தாட்சி **அ.சா.ஆ 6**, கத்தியை கைப்பற்றிய அத்தாட்சி **அ.சா.ஆ 7** ஆகும். பின்னர் எதிரிகளை நிலையம் கொண்டுவந்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைத்தேன். பின்னர் வழக்கு சொத்துக்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். அருவாள் அனுப்பிவைத்த படிவம் 91 **அ.சா.ஆ 8** ஆகும். கத்தி

அனுப்பிவைத்த படிவம் 91 **அ.சா.ஆ 9** ஆகும் அதற்கு முன்னதாக 17.05.2024 அன்று புகார் கொடுத்த பின்பு புகார்தாரர் எனது விசாரணையின் போது சம்பவத்தின் போது எதிரிகளால் சேதம் ஏற்படுத்தப்பட்ட வாதியின் டீசர்ட் -யை ஒப்படைத்ததை படிவம் 91 மூலம் கைப்பற்றினேன் மேற்படி படிவம் 91 **அ.சா.ஆ 10** ஆகும். பின் இவ்வழக்கின் விசாரணை முடித்து எதிரிகள் மீது இ.த.ச பிரிவு 341, 294(b), 353, 307, மற்றும் 506(2) ன் படி 27.06.2024 அன்று குற்ற இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை</u>

1. உங்களிடம் கொடுத்த புகாரில் பட்டியல் சாட்சி1, 2 மற்றும் போலிஸ் பார்ட்டி சகிதம் போனதாகதான் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். அந்த போலிஸ் பார்டி யார் என்றும் உங்கள் குற்ற இறுதி அறிக்கையில் காண்பிக்கவில்லை என்றால் சரிதான். உங்கள் வழக்கு நாட்குறிப்பிலும் அந்த போலிஸ் பார்டி யார் என்றும் துலங்காது என்றால் சரிதான். நீங்கள் கைப்பற்றிய அத்தாட்சியில் கைப்பற்றிய சான்று பொருட்களின் அளவுகளை குறிக்கவில்லை என்றால் சரிதான். படிவம் 91 ல் கைப்பற்றிய அருவாள் மற்றும் கத்தியின் அளவுகளை குறிக்கவில்லை என்றால் சரிதான். அ.சா.1 புகாரை எங்கு வைத்து தட்டச்சு செய்தார் என்று உங்கள் விசாரணையில் தெரியவரவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் கலம் 15 ல் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நேரம் என்னால் குறிப்பிடப்படவில்லை என்றால் பொதுவாக குறிப்பிடப்படுவதில்லை. பொதுவாக குறிப்பிடப்படுவதில்லை என்று இந்த வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர் என்றால் சரியல்ல. நீங்கள்

பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை யார் மூலமாக நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது என்று உங்களால் சொல்ல முடியாது என்றால் சரியல்ல அன்றைய தினம் எதிரிகள் வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டதால் அந்த வழிக்காவல் காவலர்கள் மூலம் கொடுத்தனுப்பப்பட்டது. வழக்கு பதிவு செய்தவுடன் முதல் தகவல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கின் 1ம் எதிரியின் கைது குறிப்பாணை 17.05.2024 மதியம் 1.45 மணிக்கு உங்களால் தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல மேற்படி ஆவணமானது நிலையம் வந்துதான் தயார் செய்யப்பட்டது 1.45 மணி என்பது கைது செய்யப்பட்ட நேரமாகும். கைது குறிப்பாணையில் என்னனென்ன எழுதவேண்டும் என்ற விபரத்தை குறித்து வைத்துக்கொண்டு பின் நிலையம் வந்து கைது குறிப்பாணையை தயார் செய்துள்ளீர் என்றால் சரிதான் நிலையம் வந்து அதற்கென்று உள்ள CCTNS App ல் தான் பதிவு செய்யமுடியும் அதனால் அவ்வாறு செய்தேன். காவல் அடைப்பு அறிக்கையின் 3 வது பக்கத்தில் எதிரிகள் கைதின் போது கடைப்பிடிக்கவேண்டிய உச்சநீதிமன்ற வழிகாட்டுதலை கடைப்பிடித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளீர் என்றால் சரிதான். கைது செய்த இடத்தில் கைது செய்ததற்கான ஆவணங்கள் எதையும் கைது செய்த இடத்தில் வைத்து எதிரிகளுக்கு வழங்கியதாக என்னுடைய குற்ற இறுதி அறிக்கையில் கூட எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். காவல் நிலையத்தில் வைத்து நீங்கள் தயார் செய்ததாக சொல்லக்கூடிய கைதுகுறிப்பாணை எத்தனை மணிக்கு Printout எடுக்கப்பட்டது என்றால் எதிரியை கைது செய்து நிலையம் கொண்டுவந்த உடனேயே வந்து எடுக்கப்பட்டது குறிப்பாக நேரம் சொல்லமுடியவில்லை. எத்தனை

மணிக்கு எதிரிகளுடன் நிலையம் வந்ததாக உங்களின் வழக்கு நாட்குறிப்பில் உள்ளது என்றால் 16.15 மணிக்கு என்று உள்ளது அப்படியென்றால் கைது குறிப்பாணை 16.15 மணிக்கு பின்பாக Printout எடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். உங்களிடம் அ.சா.1 சீருடை அணியாமல் காவல்துறை பணியில் இருந்ததற்கு அனுமதி கடிதம் எதையும் சமர்ப்பித்தாரா என்றால் அதற்கென்று தனியாக எந்த அனுமதி கடிதமும் கிடையாது ஏற்கனேவே வேறொரு வழக்கில் இந்த எதிரியை கைது செய்வதற்காக தனி அலுவலாக நியமிக்கப்பட்ட விபரம் நிலைய கோப்புகளில் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி தனி அலுவல் விபரம் என்றைய தேதியில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்ற விபரம் இந்த வழக்கு நாட்குறிப்பில் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை தினசரி பணி ஒதுக்கீடு செய்யும் நாட்குறிப்பில் உள்ளது. இது சம்பந்தமான குறிப்பு எதுவும் இந்த வழக்கு நாட்குறிப்பில் உள்ளதா என்றால் இல்லை. தனி அலுவலாக தன்னை நியமித்த விபரத்தை அ.சா.1 தன்னுடைய புகாரில் தெரிவித்துள்ளாரா என்றால் ஆம் அந்த வழக்கின் எண்ணை குறிப்பிட்டு சொல்லியுள்ளார். சாட்சி தற்போது புகாரை பார்த்துவிட்டு தனி அலுவலாக நியமித்ததாக குறிப்பாக வார்த்தை இல்லை என்கிறார். மேலும் சாட்சி அந்த வழக்கின் எண்ணை குறிப்பிட்டு எதிரிகளை தேடிசெல்வதாகவும் குறிப்பிட்டுள்ளார். உங்கள் விசாரணையின் போது அ.சா.1 அவ்வாறு தன்னை தன்னுடைய மேலதிகாரிகள் தனி அலுவலாக நியமித்ததாக சொல்லியுள்ளாரா என்றால் இல்லை. அந்த வழக்கின் விசாரணை அதிகாரி எதிரிகளை கைது செய்யுமாறு அ.சா.1க்கு எழுத்து மூலமான உத்தரவு ஏதேனும் பிறப்பித்திருந்தாரா என்று பார்வையிட்டேனா என்றால் இல்லை. அ.சா.1 அரசு பணியில் இருந்ததை காண்பிக்கும் பாக்கெட் நோட்புக்கை

கைப்பற்றவில்லை என்றால் சரிதான். உங்களுக்கு உதவி ஆய்வாளர் பயிற்சியின்போது காவல் நிலைய ஆணைகள் குறித்து பயிற்சி வழங்கப்பட்டது என்றால் சரிதான். அதன்படி ஒரு வழக்கில் காவலர்கள் உள்ளீட்டோர்களின் பணி தொடர்பான அலுவல்கள் ஏதும் வழக்கில் தொடர்பு பட்டிருந்தால் அந்த வழக்கு நாட்குறிப்பில் மேற்படி காவல் அலுவலர்களின் பாக்கெட்நோட்புக் நகல்கள் கைப்பற்றப்பட்டு இணைக்கப்பட்டிருக்க வேண்டும் என்றால் சரிதான் ஆனால் அது கட்டாயமில்லை. இந்த வழக்கில் சம்பவ இடத்தில் இருந்த எந்த சாட்சிகளையும் நான் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல பார்வை மகஜர் மற்றும் ஒப்புதல் வாக்குமூலத்தில் சம்பவ இடத்தில் இருந்த சாட்சிகளை சேர்த்துள்ளேன். வரைபடத்தில் பட்டியல் சாட்சி 3 முதல் 6 வரையிலானவர்களின் இருப்பிடங்கள் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் சம்பவம் நடந்த இடம் வாழைத்தோட்டங்கள் நிறைந்த காட்டுப்பகுதியாகும் அதனால் இருப்பிடங்கள் குறித்த விபரம் துலங்காது. வரைபடத்தில் சம்பவம் நடந்த இடம் என்று எதை குறிப்பிட்டுள்ளீர்கள் என்றால் குறிப்பிடவில்லை சம்பவத்தில் சொல்லப்பட்டுள்ள காலங்கரை பாலம் குறிப்பிடப்பட்டுள்ளது. வரைபடத்தில் காலங்கரை செல்லும் ரோடு என்று குறிப்பீட்டுள்ளீரே தவிர காலங்கரை பாலம் என்று எதையும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். உங்கள் வரைபடத்தின்படி சம்பவ இடம் X குறியீடு செய்யப்பட்ட வட்டம் போடப்பட்டதாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் வரைபடத்தில் அதுபோல் குறியீடு எதுவும் இல்லை என்றால் சரிதான். நீங்கள் பதிவு செய்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அதை நீங்களே உங்கள் மடிக்கணினியில் தட்டச்சு செய்ததாக எந்த விபரமும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். இந்த ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் புகார்மனு யாரால்

தட்டச்சு செய்யப்பட்டது என்பது உங்களுக்கு தெரியாது என்றால் சரிதான். மேற்படி புகார் மற்றும் ஒப்புதல் வாக்குமூலத்திற்கான 65 B, IEA படியான சான்றிதழ் இணைக்கப்படவில்லை என்பதால் அவை ஏற்றுக்கொள்ளத்தகக்க ஆவணம் அல்ல என்றால் சரியல்ல. சம்பவம் இடத்தில் முறைக்காவல் புரியும் காவலர்களை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நீங்கள் சொன்ன நாள் நேரம் மற்றும் விதத்தில் எந்தவிதமான சம்பவமும் நடைபெறவில்லை, காவல் நிலையத்தில் வைத்து வழக்காவணங்களை நீங்களும் அ.சா.1ம் சதிதிட்டம் தீட்டி தயாரித்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. கைது செய்ய செல்லும்போது காவல் அலுவலர்கள் அவர்களின் பெயர்பலகை தெரியும் படியான காவலர் சீருடையை அணிந்திருக்க வேண்டும் என்பது விதி என்றால் அது அனைத்து சூழ்நிலைகளுக்கும் பொருந்ததாது. பொருந்தாத சூழ்நிலைகள் குறித்து உங்களின் மேல் அதிகாரிகளின் உத்தரவு ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை. நீங்கள் கைது செய்யும் போது குவிமுச பிரிவு 41 யை தான் பின்பற்ற வேண்டும் என்றால் சரிதான். இந்த வழக்கின் அ.சா.1 41B யை பின்பற்றியதாக உங்கள் விசாரணையில் தெரியவரவில்லை என்றால் ஆவணங்களை பார்த்தால் தான் சொல்லமுடியும். என்னிடம் அ.சா.1 கைது செய்ய சென்ற போது கொண்டு சென்றதாக சொல்லி கைது குறிப்பாணைகள் எதையும் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். அ.சா.1 அரசு பணியில் இருந்ததற்கான ஆவணங்கள் எதையும் இவ்வழக்கின் இறுதி அறிக்கையுடன் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நீங்கள் சொல்வது போல் அசா.1 எந்த வழக்கு விசாரணைக்காகவும் அங்கு செல்லவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1 ற்கும் எதிரிகளுக்கும்

இடையே இருந்த தனிப்பட்ட பகை காரணமாக இந்த வழக்கு காவல் நிலையத்தில் வைத்து உங்களாலும் அ.சா.1 லும் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வரைபடத்தில் கண்டுள்ள திருமால், பாஸ்கரன், முருகன், அசோக்ராஜ் ஆகியோரை நான் இந்த வழக்கில் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி நபர்களை விசாரித்திருந்தால் மேற்படி சம்பவம் நடைபெறவில்லை என்று தெரியவந்துவிடும் என்பதால் அவர்களை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1 ன் மேலதிகாரி நீங்கள் என்பதால் அ.சா.1 ன் புகாருக்கு ஆதரவாக சாட்சியம் அளித்துள்ளீர் என்றல் சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை.**

**ஒம்/–S.பிரியா,**
**தலைமை நீதித்துறை நடுவர்,**
**தூத்துக்குடி.**